சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

EA No.2/2025 in EP No. 23/2017 in OS 101/2014

பெயர். திரு.ஏழுமலை நாள் 06.02.2026
த/பெ.ராமலிங்கம்

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தீர்ப்புக் கடனாளி என்னுடைய அண்ணி என்று சொன்னால் சரிதான். சுந்தரியின் கணவர் சீனிவாசன் என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். சுந்தரி 1ம் எதிர் மனுதாரருக்கு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சுந்தரியின் கணவர் சீனிவாசன் தான் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. சீனிவாசன் தனக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

2. நானும் மூசிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் தான். சீனிவாசன் மற்றும் சுந்தரி ஆகியோர் சீட்டு பிடித்தனரா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் நிறைய நபர்களுக்கு தொகை கொடுக்க வேண்டியிருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அருண்மொழி என்பவர் மனு சொத்துகளை, இதே நீதிமன்றத்தில் வேறொரு வழக்கில் ஜப்தி செய்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அருண்மொழிக்கு தர வேண்டிய தொகையை சமாதானம் பேசி, சமாதானம் ஆகி

விட்டது என்றால் எனக்கு தெரியாது. 04.03.2019 அன்று அருண்மொழி மனு சொத்தை இந்நீதிமன்றத்தில் ஜப்தி செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

3. மனு சொத்திற்கான பட்டா சீனிவாசன் பெயரில் இருந்ததா என்றால் என் தகப்பனார் பெயரில் இருந்தது. பட்டா சீனிவாசன் பெயரில் இருந்தது என்றாலும், அதை ஒப்புக் கொண்டு சீனிவாசன் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால், சுமார் 6 மாதத்துக்கு முன்பு நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் பேசிக் கொண்டிருந்த போது தெரிந்தது. முதல் விசாரணையில் செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்த பிறகு எதிர்மனுதாரர்கள் கடனுறுதி சீட்டை உருவாக்கி கொண்டனர் என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் 2014ல் அந்த கடனுறுதி சீட்டை உருவாக்கி கொண்டனர்.

4. 1ம் எதிர் மனுதாரரிடம், 2ம் எதிர்மனுதாரர் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக நான் பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சீனிவாசனுக்குண்டான 7ல் 1 பாகத்தை 1ம் எதிர்மனுதாரர் ஏலம் எடுத்து விற்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் மனு சொத்தில் சீனிவாசனுக்கு உரிமை இருந்திருந்தால், அவரும் 7ல் 1 பாகம் கேட்டு மனு தாக்கல் செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. இம்மனுவில்

சீனிவாசன் தரப்பினர் இல்லை என்று சொன்னல் சரியல்ல. ஏன் சீனிவாசனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், அவருடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்பதால் சேர்க்கவில்லை. சீனிவாசனுடன் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. கூட்டு அனுபவம் உடையவர் கடன் பெற்றிருந்தால், அந்த கடன் மற்ற அனுபவதாரரையும் கட்டுப்படுத்தும் என்றால் எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டு செல்லாது என்று கூறும் போது சீனிவாசன் எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டு என்னைக் கட்டுப்படுத்தும் என்று சொன்னால் எனக்கு தெரியாது. சீனிவாசன் எத்தனை பேரை ஏமாற்றியுள்ளார் என்று எனக்கு தெரியாது. மனு பத்தி 4ல் சீனிவாசனுக்கு 7ல் ஒரு பாகம் உள்ளது என்றாலும், அது குறித்து கடன் கட்டுப்படுத்தும் என்று கூறியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. என் சகோதரர் சீனிவாசன் மற்றும் அவரது மனைவி சுந்தரி ஆகியோர் கடன் பெற்று ஏமாற்றுவதற்காக நானும் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்து மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. 2ம் எதிர் மனுதாரர் கடனை ஏமாற்றுவதற்காக நானும், சீனிவாசனும் சேர்ந்து பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நீதிமன்ற மதிப்பு ரூ.12 லட்சம் போடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் ரத்து

செய்யும் விவரம் தெரியாது என்றாலும், அதனை பொறுத்து தான் 1ம் எதிர் மனுதாரர் கடனளித்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 1993ல் இறந்து போனார். பட்டா சீனிவாசன் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. கடனை ஏமாற்றுவதற்காக, ஜப்தி நிறுத்த வேண்டுமென்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரத்து பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோராமல் சொத்து சுந்தரிக்கு உரியது என்றால் சரியல்ல. நான் பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை